2023 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நவம்பர், டிசம்பர் மாதங்கள் மழைக் காலம்தானே! நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவமழை.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நான் என் ராசி என்று சொல்கிறேன். நீங்கள் மழைக் காலம் என்று சொல்கிறீர்களே! (சிரிப்பு) சரியானவர் சார், நீங்கள். (சிரிப்பு) எனவே, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அனைவருக்கும் நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்காக அவருக்கும் இந்த மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானம் திருத்தியவாறு பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) அந்த வார்த்தைகளை நீங்கள் வாபஸ் வாங்கிக்கொள்கிறீர்கள்தானே, நன்றி.

4. அறிவிப்புகள்

(இ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு காலநிலை மாற்றம் குறித்த பயிற்சிப் பட்டறை 9-10-2023 அன்று மாலை நடைபெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையால், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குக் காலநிலை மாற்றம் குறித்த பயிற்சிப் பட்டறை இன்று 9–10–2023 பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுவதாக இருந்தது. ஆனால்,*

[பேரவைத் தலைவர்] [2023 அக்டோபர் 9

இப்போதே 2-00 மணி ஆகிவிட்ட காரணத்தினால் பிற்பகல் 4-00 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கத்தில் 3-வது தளத்தில் அமைந்துள்ள பல்வகை கூட்ட அரங்கில் நடத்தப்பட உள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இப்பயிற்சிப் பட்டறையில் தவறாது கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-10-2023), செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

133. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 18-3-2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 9-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

134. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 24-4-2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 11-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

135. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறையின் 18-7-2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 27-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

136. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்